**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**OMR Sheet No. :** ..............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ____________________

(In words)

**Test Booklet No.**

**J – 2609**

**PAPER – II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered in the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ● (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and OMR Answer Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ● (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं OMR उत्तर-पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक ( कैलकुलेटर ) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

# TAMIL

## PAPER – II

**Note:** This paper contains fifty (50) multiple-choice questions, each question carrying two (2) marks. Attempt all the questions.

**குறிப்பு:** இந்த வினாத்தாளில் ஐம்பது (50) விடைதெரி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிப்பெண்கள் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** நன்னூலுக்கு உரை எழுதியவர்

(A) ஆறுமுக நாவலர் (B) கல்லாடர்

(C) தெய்வச் சிலையார் (D) நச்சினார்க்கினியர்

**2.** கோட்டைப் போருக்குரிய திணை

(A) காஞ்சி (B) உழிஞை (C) வாகை (D) வஞ்சி

**3.** பட்டினப் பாலையின் ஆசிரியர்

(A) மருத்துவன் தாமோதரனார் (B) பெருங்குன்றூர் கிழார்

(C) கடியலூர் உருத்திரங்கண்ணனார் (D) மாங்குடி மருதனார்

**4.** தொல்காப்பியத்தில் 'இயற்கைப் புணர்ச்சி' இடம்பெறும் பகுதி

(A) மெய்ப்பாட்டியல் (B) குற்றியலுகரப் புணரியல்

(C) புணரியல் (D) களவியல்

**5.** ஆசாரக் கோவையின் ஆசிரியர்

(A) முன்றுறையரையனார் (B) நல்லாதனார்

(C) பெருவாயின் முள்ளியார் (D) கணி மேதாவியார்

**6.** 'பதிகம்' எனக் குறிக்கப்பெறுவது

(A) 12 பாடல்கள் கொண்டது (B) 15 பாடல்கள் கொண்டது

(C) 10 பாடல்கள் கொண்டது (D) 20 பாடல்கள் கொண்டது

7. ‘பாசுரம்’ எனக் குறிக்கப்பெறுவது

(A) சித்தர் பாடல்கள் (B) தேவாரப் பாடல்கள்

(C) ஆழ்வார் பாடல்கள் (D) தாயுமானவர் பாடல்கள்

8. ‘அருட்பிரகாச வள்ளலார்’ எனப் போற்றப்பெறுபவர்

(A) மாணிக்க வாசகர் (B) திருமூலர்

(C) தெய்வச் சேக்கிழார் (D) இராமலிங்க அடிகள்

9. ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்றவர்

(A) அறிஞர் அண்ணா (B) தந்தை பெரியார்

(C) தாயுமானவர் (D) திருமூலர்

10. ‘உயர்வற உயர்நலம் உடையவன் எவன்?’ என உரைத்தவர்

(A) அருணகிரி நாதர் (B) சிவப்பிரகாசர்

(C) குமர குருபரர் (D) நம்மாழ்வார்

11. மூலபாடத் திறனாய்வு முன்னோடி

(A) கா. சிவத்தம்பி (B) மு. வரதராசன்

(C) உ.வே. சாமிநாத அய்யர் (D) கைலாசபதி

12. கமலாம்பாள் சரித்திரம் தொடர்கதையாக வெளிவந்த இதழ்

(A) இலக்கிய வட்டம் (B) மணிக்கொடி

(C) எழுத்து (D) விவேக சிந்தாமணி

13. பம்மல் சம்மந்த முதலியார் எழுதிய அங்கத நாடகம்

(A) அகலிகை (B) ரூபாவதி

(C) சபாபதி (D) சுலோச்சனா சதி

14. ‘‘நல்லறிவை நாளும் உணர்த்தி உணர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலை தேடல் வேண்டும்’’ என்று பாடியவர்.

(A) பாரதியார் (B) சுரதா
(C) கண்ணதாசன் (D) பாரதிதாசன்

15. ‘என் கதை’ என்ற சுயவரலாறு எழுதியவர்

(A) வ.உ. சிதம்பரனார் (B) அப்துல்கலாம்
(C) நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை (D) புதுமைப்பித்தன்

16. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

(i) முத்தொள்ளாயிரம்
(ii) நான்மணிக்கடிகை
(iii) திருத்தாண்டகம்
(iv) கார் நாற்பது

**இவற்றுள்:**

(A) (i)-ம் (ii)-ம் சரி
(B) (ii)-ம் (iv)-ம் சரி
(C) (ii)-ம் (iii)-ம் சரி
(D) (i)-ம் (iv)-ம் சரி

17. தண்டியலங்காரம் குறிப்பிடும் சொல்லாட்சிகள்

(i) துணை செயல் விலக்கு
(ii) இயல்பு விபாவனை
(iii) அறத்தொடு நிலைப்படல்
(iv) ஒருகண் மயக்கம்

**இவற்றுள்:**

(A) (i)-ம் (iii)-ம் சரி
(B) (ii)-ம் (iv)-ம் சரி
(C) (i)-ம் (ii)-ம் சரி
(D) (ii)-ம் (iii)-ம் சரி

18. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்

(i) இளம்பூரணர்

(ii) சேனாவரையர்

(iii) நச்சினார்க்கினியர்

(iv) ச.வே. சுப்பிரமணியன்

**இவற்றுள்:**

(A) (i)-ம் (iii)-ம் சரி

(B) (iii)-ம் (ii)-ம் சரி

(C) (i)-ம் (iv)-ம் சரி

(D) (ii)-ம் (iv)-ம் சரி

19. பாவைப் பாடல்களைப் பாடினோர்

(i) ஆண்டாள்

(ii) கண்ணதாசன்

(iii) இராமலிங்க அடிகள்

(iv) தாயுமானவர்

**இவற்றுள்:**

(A) (i)-ம் (iii)-ம் சரி

(B) (ii)-ம் (iii)-ம் சரி

(C) (i)-ம் (ii)-ம் சரி

(D) (iv)-ம் (iii)-ம் சரி

20. திறனாய்வை வளர்த்த இதழ்கள்

(i) எழுத்து

(ii) கசடதபற

(iii) தீபம்

(iv) சுதேசமித்திரன்

**இவற்றுள்:**

(A) (i)-ம் (ii)-ம் (iii)-ம் சரி

(B) (i)-ம் (ii)-ம் சரி

(C) (i)-ம் (iv)-ம் சரி

(D) (ii)-ம் (iii)-ம் சரி

21. ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய நூல்கள்

(i) அலையும் கலையும்

(ii) அடியும் முடியும்

(iii) வேலும் வில்லும்

(iv) கங்கையும் காவிரியும்

**இவற்றுள்:**

(A) (i)-ம் (iii)-ம் சரி

(B) (ii)-ம் (iii)-ம் (iv)-ம் சரி

(C) (i)-ம் (ii)-ம் (iv)-ம் சரி

(D) (i)-ம் (ii)-ம் (iii)-ம் சரி

22. **உறுதிக்கூற்று:** உரையாசிரியர் என்று போற்றப் பெறுபவர் இளம்பூரணர்

**காரணம் :** தொல்காப்பியம், நன்னூல் இரண்டிற்கும் உரை வழங்கியுள்ளார்.

(A) உ, கா இரண்டும் சரி

(B) உ சரியன்று; கா சரி

(C) உ சரி; கா சரியன்று

(D) உ, கா இரண்டும் சரியல்ல

23. **உறுதிக்கூற்று:** மலைபடுகடாம் என்பது ஓர் ஆற்றுப்படை நூல்

**காரணம் :** பாணன் ஒருவன் விறலி ஒருத்தியை ஆற்றுப்படுத்தியதால்

(A) உ சரியன்று; கா சரி (B) உ சரி; கா சரியன்று

(C) உ, கா இரண்டும் சரி (D) உ, கா இரண்டும் சரியல்ல

24. **உறுதிக்கூற்று:** சங்கப் புலவர்களில் ஒருவர் பெயர் தேய்புரி பழங்கயிற்றனார்

**காரணம்:** அவர் பாட்டில் தேய்புரி பழங்கயிறு உவமையாக இடம்பெற்றிருக்கிறது

(A) உ சரி; கா சரியன்று (B) உ சரியன்று; கா சரி

(C) உ, கா இரண்டும் சரியல்ல (D) உ, கா இரண்டும் சரி

25. **உறுதிக்கூற்று:** சுந்தரர், 'வன்தொண்டர்' என அழைக்கப்பெறுகிறார்

**காரணம்:** இறையடியார்களிடம் அன்புடன் பேசியதால்

(A) உ சரி; கா சரியன்று (B) உ, கா இரண்டும் சரி

(C) உ சரியன்று; கா சரி (D) உ, கா இரண்டும் சரியல்ல

26. **உறுதிக்கூற்று:** 'பரசமயக் கோளறி' எனத் திருஞானசம்பந்தர் அழைக்கப் பெறுகிறார்

**காரணம்:** சமரச நோக்குடன் பல சமயங்களையும் போற்றியதால்

(A) உ சரி; கா சரியன்று (B) உ, கா இரண்டும் சரி

(C) உ சரியன்று; கா சரி (D) உ, கா இரண்டும் சரியல்ல

27. **உறுதிக்கூற்று:** பாரதிதாசன் ஒரு பகுத்தறிவுக் கவிஞர்

**காரணம் :** சுயமரியாதை இயக்கச் சார்பால்

(A) உ சரி; கா சரியன்று (B) உ, கா இரண்டும் சரி

(C) உ சரியன்று; கா சரி (D) உ, கா இரண்டும் சரியல்ல

28. **உறுதிக்கூற்று:** ஏ.கே. செட்டியார் பயண இலக்கியத்தின் முன்னோடி ஆவர்

**காரணம்:** உலக நாடுகள் பல சுற்றிவந்து நூல் எழுதியவர்

(A) உ சரியன்று; கா சரி
(B) உ, கா இரண்டும் சரியல்ல
(C) உ, சரி; கா சரியன்று
(D) உ, கா இரண்டும் சரி

29. நிரல்படுத்துக:

உவமையின் தோற்றத்திற்கான களங்கள்:

(A) வினை, பயன், மெய், உரு
(B) உரு, மெய், வினை, பயன்
(C) மெய், வினை, பயன், உரு
(D) உரு, வினை, மெய், பயன்

30. திருக்குறள் கூறும் வரிசை முறை

(A) தூங்காமை, துணிவுடைமை, கல்வி
(B) தூங்காமை, கல்வி, துணிவுடைமை
(C) துணிவுடைமை, தூங்காமை, கல்வி
(D) கல்வி, தூங்காமை, துணிவுடைமை

31. சமய நெறிகள் நான்கு

(A) யோகம், ஞானம், கிரியை, சரியை
(B) சரியை, கிரியை, யோகம், ஞானம்
(C) ஞானம், சரியை, யோகம், கிரியை
(D) யோகம், சரியை, கிரியை, ஞானம்

32. ஐம்பொறிகள்

(A) வாய், மூக்கு, கண், செவி, மெய்
(B) கண், மூக்கு, வாய், செவி, மெய்
(C) மூக்கு, செவி, கண், மெய், வாய்
(D) மெய், வாய், கண், மூக்கு, செவி

33. மகளிர்ப் பருவங்களின் வரிசைமுறை

(A) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை
(B) பெதும்பை, மங்கை, மடந்தை, பேதை
(C) மங்கை, மடந்தை, பேதை, பெதும்பை
(D) பெதும்பை, மங்கை, மடந்தை, பேதை

பொருத்துக: (34 - 35)

**34.** (a) கபிலர் — (i) செங்குட்டுவன்

(b) பரணர் — (ii) இளஞ்சேரலிரும்பொறை

(c) அரிசில்கிழார் — (iii) செல்வக் கடுங்கோ வாழியாதன்

(d) பெருங்குன்றூர்கிழார் — (iv) பெருஞ்சேரல் இரும்பொறை

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (i) | (iv) | (ii) |
| (B) | (ii) | (i) | (iv) | (iii) |
| (C) | (i) | (iii) | (iv) | (ii) |
| (D) | (iii) | (ii) | (iv) | (i) |

**35.** (a) மயிலை நாதர் — (i) இலக்கண விளக்கம்

(b) கல்லாடர் — (ii) வீரசோழியம்

(c) வைத்தியநாத தேசிகர் — (iii) தொல்காப்பியம்

(d) பெருந்தேவனார் — (iv) நன்னூல்

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (iii) | (i) | (ii) |
| (B) | (iii) | (i) | (iv) | (ii) |
| (C) | (ii) | (iii) | (iv) | (i) |
| (D) | (iii) | (iv) | (i) | (ii) |

**36.** (a) உடற்கூற்று வண்ணம் — (i) திருநாவுக்கரசர்

(b) மூத்த திருப்பதிகம் — (ii) மாணிக்கவாசகர்

(c) சிவ புராணம் — (iii) காரைக்கால் அம்மையார்

(d) திரு அங்கமாலை — (iv) பட்டினத்தார்

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (iii) | (ii) | (i) |
| (B) | (iii) | (iv) | (i) | (ii) |
| (C) | (ii) | (iii) | (iv) | (i) |
| (D) | (i) | (iii) | (ii) | (iv) |

37. (a) அருட்பெருஞ்சோதி அகவல் (i) சுந்தரர்

(b) பராபரக் கண்ணி (ii) குணங்குடி மஸ்தான்

(c) திருத்தொண்டத் தொகை (iii) நம்பியாண்ட நம்பி

(d) திருத்தொண்டர் திருவந்தாதி (iv) இராமலிங்க அடிகள்

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (i) | (ii) |
| (B) | (ii) | (i) | (iv) | (iii) |
| (C) | (i) | (iii) | (ii) | (iv) |
| (D) | (iv) | (ii) | (i) | (iii) |

38. (a) என் கடன் பணி செய்து கிடப்பதே (i) திருமூலர்

(b) அற்றது பற்றெனில் உற்றது வீடு (ii) திருமங்கை ஆழ்வார்

(c) நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் (iii) திருநாவுக்கரசர்

(d) யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் (iv) நம்மாழ்வார்

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (iii) | (iv) | (i) |
| (B) | (iii) | (iv) | (ii) | (i) |
| (C) | (iv) | (iii) | (i) | (ii) |
| (D) | (iii) | (i) | (iv) | (ii) |

39. (a) நாகம்மாள் (i) இராஜம் கிருஷ்ணன்

(b) கதவு (ii) தி. ஜானகி ராமன்

(c) மரப்பசு (iii) ஆர். சண்முக சுந்தரம்

(d) கரிப்பு மணிகள் (iv) கி. ராஜநாராயணன்

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (ii) | (iv) | (i) |
| (B) | (iv) | (ii) | (iii) | (i) |
| (C) | (iii) | (iv) | (ii) | (i) |
| (D) | (ii) | (i) | (iii) | (iv) |

**40.** (a) அப்துல் ரகுமான் (i) தேன்மழை

(b) பாரதிதாசன் (ii) மாங்கனி

(c) சுரதா (iii) பித்தன்

(d) கண்ணதாசன் (iv) மணிமேகலை வெண்பா

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (i) | (ii) |
| (B) | (iii) | (ii) | (i) | (iv) |
| (C) | (iv) | (iii) | (ii) | (i) |
| (D) | (i) | (ii) | (iv) | (iii) |

**41.** (a) அசோகவனம் (i) கல்கி

(b) இலக்கிய தீபம் (ii) மு. வரதராசன்

(c) ஓவச் செய்தி (iii) ஆ. முத்துசிவன்

(d) அலை ஓசை (iv) வையாபுரிப் பிள்ளை

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (ii) | (i) | (iv) |
| (B) | (iii) | (iv) | (ii) | (i) |
| (C) | (iv) | (iii) | (i) | (ii) |
| (D) | (iv) | (iii) | (ii) | (i) |

**42.** (a) பி.எஸ். இராமையா (i) மந்திரிகுமாரி

(b) அறிஞர் அண்ணா (ii) பசி

(c) கலைஞர் மு. கருணாநிதி (iii) வேலைக்காரி

(d) இந்திரா பார்த்தசாரதி (iv) பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iv) | (i) | (iii) | (ii) |
| (B) | (iv) | (iii) | (i) | (ii) |
| (C) | (iii) | (iv) | (i) | (ii) |
| (D) | (ii) | (iv) | (i) | (iii) |

43. (a) நா. முத்துசாமி — (i) புறஞ்சேரி
(b) இந்திரா பார்த்தசாரதி — (ii) ஔவை
(c) இன்குலாப் — (iii) நாற்காலிக்காரர்
(d) சே. இராமானுஜம் — (iv) ஔரங்கசீப்

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (ii) | (iv) | (iii) | (i) |
| (B) | (iv) | (iii) | (ii) | (i) |
| (C) | (iii) | (iv) | (ii) | (i) |
| (D) | (ii) | (iii) | (iv) | (i) |

44. (a) ஆசிரியப்பா — (i) செப்பலோசை
(b) வெண்பா — (ii) துள்ளலோசை
(c) கலிப்பா — (iii) தூங்கலோசை
(d) வஞ்சிப்பா — (iv) அகவலோசை

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (i) | (ii) |
| (B) | (iv) | (iii) | (i) | (ii) |
| (C) | (iv) | (i) | (ii) | (iii) |
| (D) | (iii) | (i) | (iv) | (ii) |

45. (a) சி.சு. செல்லப்பா — (i) கம்பர்
(b) தெ.பொ.மீ — (ii) இலக்கியத்துக்கு ஓர் இயக்கம்
(c) வ.சுப. மாணிக்கம் — (iii) வாடி வாசல்
(d) க.நா. சுப்பிரமணியன் — (iv) கானல் வரி

| | *(a)* | *(b)* | *(c)* | *(d)* |
|---|---|---|---|---|
| (A) | (iii) | (iv) | (ii) | (i) |
| (B) | (iii) | (i) | (iv) | (ii) |
| (C) | (iii) | (iv) | (i) | (ii) |
| (D) | (iv) | (iii) | (i) | (ii) |

**கீழ்வரும் கட்டுரைப் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம்பெறும் வினாக்களுக்கு உரிய விடைகளைத் தருக.**

தமிழகம் மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட ஒரு நாடு. இத் தீபகற்பமும் நாற்புறமும் கடல் சூழ்ந்த தீவுகளாகிய நாடுகளைப் போன்ற இயற்கைச் சூழ்நிலைகளைப் பெற்றதாகும். எனவே, இத்தமிழ்நாட்டு மக்கள் கடல் வாழ்வில் ஒன்றிக் கடற்பகைகளை வென்று கடல் வாணிகத்தில் ஓங்கி உயர்ந்ததில் வியப்பின்று. இன்றைய தமிழகத்தையும் தமிழக மக்களையும் பார்க்குங்கால், இவர்களா இத்தகைய மேம்பாடு, நாகரிகம், செல்வச்செழிப்பு ஆகியவற்றைப் பெற்றிருந்தனர் என வியப்பு ஏற்படுகிறது. எங்ஙனமாயினும், இன்றைய தாழ்நிலைதான் வியப்புக்குரியதே அன்றி முன்னைய உயர்நிலை வியப்புக்கு உரியதன்று.

பழந்தமிழ் இலக்கியத்தில் இப்பெருமை பொருந்திய வரலாற்றுக் குறிப்புகள் பல ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றன. வெளிநாட்டு யாத்திரிகர்களின் குறிப்புகளும் இவற்றுக்கு உதவி செய்கின்றன. இவை அனைத்தையும் கொண்டு ஆராயுங்கால், சில பகுதிகள் தமிழ்மக்கள் மிகுதியும் கடலோடு ஒன்றிய வாழ்வு உடையவர்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன; சில பகுதிகள் கடலின்கண் இருந்த பகைவர்களை வென்று, கடலாட்சி செலுத்திய வேந்தர்களின் பெருவீரத்தைப் பறைசாற்றுகின்றன; சில பகுதிகள் கடல் வாணிகத்தில் தமிழ்மக்கள் மிக மேம்பட்டு இருந்தமையைத் தெளிவுபடுத்துகின்றன.

தமிழகத்தை மூவேந்தர்கள் ஆண்டார்கள் என்பது வரலாறு. அம் மூவரும் கடற்கரை பகுதிகட்கு உரியவர்களாய் இலங்கியமை நினைந்து இன்புறத்தக்கது. பிற துறைமுக நகரங்களும் சிற்றூர்களும் கடற்கரை ஓரமெங்கும் மிகப் பரவலாய்ப் பரந்து விரிந்து கிடந்தன எனினும், சேரனின் முசிறியும், பாண்டியனின் கொற்கையும், சோழனின் புகாரும் தன்னிகரற்று விளங்கின. இந் நாட்டவராலும் பாடப்பட்டன; வேறு எந் நாட்டவராலும் போற்றப்பட்டன.

கடல் வாழ்வைத் தனி வாழ்வாகக் கண்டவன் தமிழன்; கடல் வாழ்வைத் தனித் திணையாக்கித் தனி இலக்கிய வளர்ச்சி கண்டவன் தமிழன்.

உலகிலேயே கிரேக்க உரோமர்களுடன் (யவனர் என்று தமிழ் இலக்கியம் கூறுவது) ஈடுகொடுத்துக் கடல் வாணிகம் செய்து, அக்கடல் வாணிகத்தில் அவரினும் மேம்பாடு கண்டவன். அதை அவர்களைக் கொண்டே சொல்ல வைத்தவன்.

சுமேரியா, பாபிலோனியா, எகிப்து, பாலஸ்தீனம், சீனா, கிழக்கிந்தியத் தீவுகள் என அவன் கடல் வாணிகத் தொடர்பு கொண்ட நாடுகள் மிகப்பல ஆகும். கடற்கொள்ளைக் கூட்டத்தாரை அடக்கி, முதன்முதல் கடல் கடந்து ஆட்சி நிலை நாட்டிய பெருமையைத் தமிழர்களுக்குச் சேர்ப்பதில் தவறில்லை.

46. **உறுதிக்கூற்று:** கடல் வாணிகம் செய்தவர்கள் தமிழர்கள்

**காரணம்:** தலையாலங்கானத்துப் போரில் ஈடுபட்டதால்

(A) உ, கா இரண்டும் சரி
(B) உ சரியன்று; கா சரி
(C) உ, கா இரண்டும் சரியல்ல
(D) உ சரி; கா சரியன்று

47. தமிழன் கடல் வாணிகத் தொடர்பு கொண்ட நாடுகள்

(A) ஈரான், ஈராக், சவுதி அரேபியா
(B) ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரம்
(C) சுமேரியா, பாபிலோனியா, எகிப்து, பாலஸ்தீனம்
(D) மொரிசியஸ், சிங்கப்பூர், மலேசியா

48. நிரல்படுத்துக:

பழந்தமிழரின் துறைமுகங்கள்:

(A) கொற்கை, புகார், முசிறி
(B) புகார், முசிறி, கொற்கை
(C) முசிறி, கொற்கை, புகார்
(D) புகார், கொற்கை, முசிறி

49. 'யவனர்' என்று தமிழ் இலக்கியம் குறிப்பிடுவது

(A) சுமேரியர், எகிப்தியர்
(B) பாபிலோனியர், பாலஸ்தீனர்
(C) சீனர், தாய்லாந்தினர்
(D) கிரேக்கர், உரோமானியர்

50. வெளிநாட்டு யாத்திரிகர்களின் குறிப்புகள் எதற்கு உதவுகின்றன?

(A) பண்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு

(B) வரலாற்றை அறிவதற்கு

(C) நாகரிகத்தைத் தெரிந்து கொள்வதற்கு

(D) சமயத்தை அறிவதற்கு

- o O o -

**Space For Rough Work**